**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC. 494/2023**

**Prosecution Witnesses : 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜோதிபாசு | Caste | : |
| Father Name/ Husband Name | : சேகர் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(21.07.2025)**

**முதல் விசாரணை**

நான் சொக்கநாதபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பினான்ஸ் நிறுவனத்தில் பணி செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். கடந்த 31.10.2021 அன்று இரவு 9.30 மணியளவில் விருதுநகர் டு மதுரை செல்லும் நான்குவழிச்சாலையில் குதிரைசாலிகுளம் அருகே நானும் எனது மாமா தாழைமுத்துவும் டீ குடிப்பதற்காக சென்ற போது அங்கு விபத்து ஏற்பட்டது சம்பந்தமாக போலிசார் விசாரித்து வரைபடம் வரைந்து பார்வைமகசர் தயார் செய்தனர். அதில் நானும் தாழைமுத்துவும் கையெழுத்து போட்டோம். மேற்படி பார்வை மகசர் அ.சா.ஆ.1 ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் கு.வி.**

விபத்தில் இறந்துபோன பூங்கோதையின் கணவர் எனது தாத்தா ஆவார். அவர் இறந்ததை கேட்பதற்காக நான் வீட்டிற்கு வந்தேன். அந்த இறந்துபோன நபரின் வீடு ரோட்டு மேலே உள்ளது. அப்பொழுது எங்களை தவிர டீ கடைக்காரரையும் போலிசார் விசாரித்தார். ஆனால் என்னிடமும், என் மாமா தாழைமுத்துவிடமும் கையெழுத்து வாங்கினார்கள். அங்கு விபத்து

ஏற்படுத்திய வாகனம் கிழக்கு பக்கமாக நின்றிருந்தது. போலிசார் வாகனம் நின்றதையும் குறித்துக்கொண்டு என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்ன எழுதியிருந்தது என்றால் விபத்து எப்படி நடந்தது என்பது பற்றி எழுதியிருந்தார்கள். விபத்து நடந்தது எனக்கு நேரடியாக தெரியாது என்று போலிசாரிடம் சொன்னேன். அந்த விபரத்தை தான் எழுதியிருப்பதாகவும் அதில் கையெழுத்து போட சொன்னார்கள். அதனால் நான் கையெழுத்து போட்டேன். இறந்துபோன எனது தாத்தாவுக்கு 70 வயது இருக்கும்.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC. 494/2023**

**Prosecution Witnesses : 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : தாழைமுத்து | Caste | : |
| Father Name/ Husband Name | : சின்னதேவர் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(21.07.2025)**
**முதல் விசாரணை**

நான் பழனியாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். கடந்த 31.10.2021 அன்று இரவு 9.30 மணியளவில் விருதுநகர் டு மதுரை செல்லும் நான்கு வழிச்சாலையில் குதிரைசாலிகுளம் அருகே நானும் எனது தங்கை மகன் ஜோதிபாசும் டீ குடிப்பதற்காக சென்ற போது அங்கு எனது சித்தப்பா ஜெயராஜ் விபத்து ஏற்பட்டு இறந்தது சம்பந்தமாக போலிசார் விசாரித்து வரைபடம் வரைந்து பார்வைமகசர் தயார் செய்தனர். அதில் நானும் ஜோதிபாசும் கையெழுத்து போட்டோம். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் கு.வி.**

விபத்தில் இறந்துபோன ஜெயராஜ் எனது வீட்டு அருகே குடியிருக்கிறார். நாங்கள் டீ குடித்துவிட்டு வரும் போது போலிசார் நின்றுகொண்டிருந்தார்கள். விபத்து ஏற்படுத்திய வாகனம் ரோட்டின் வடக்குபுறமும் ஜெயராஜ் சென்ற இருசக்கர வாகனமும் இரண்டு நான்கு வழிச்சாலையின் மையத்தில் டிவைடர் அருகே கிடந்தது. போலிசார் அதை இரண்டு வாகனங்களும் கிடந்த நிலைமையை குறித்துகொண்டார்கள். நான்

பார்க்கும் போது படத்தில் வாகனங்கள் கிடந்ததும் குறிக்கப்பட்டிருந்தது. போலிசார் எழுதியிருந்ததில் ஜெயராஜ் இந்த இடத்தில் விழுந்து கிடந்தார் என போலிசார் எழுதியிருந்தனர். அதில் நான் கையெழுத்து போட்டேன்.